**தலைப்பு 406 - மீள் புதுப்பிக்கதக்க மின்வலு செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**
**..........................................................................................................................................**

**1. நிதிக்கூற்றுக்கள்**
**............................**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**
**.......................................................**

மீள் புதுப்பிக்கதக்க மின்வலு செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மீள் புதுப்பிக்கதக்க மின்வலு செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 ஆகஸ்ட் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 நவம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலகிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் புதுப்பிக்கதக்க மின்வலு செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**
**.....................................................................**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**
**..........................................................................................................................**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

……………………………………………………………………………………………..

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

**……………………………………………………………..……**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1.2.1 (அ) | மின் சக்தி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 10,359,937 பெறுமதியான சொத்துக்களின் 331 விடயங்கள் இராஜாங்க அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2020 நவம்பர் 30 ஆந் திகதிய 06/2020 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அச்சொத்துக்களைப் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 நவம்பர் 30 ஆந் திகதிய 06/2020 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அச்சொத்துக்களைப் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**………………………………………………………**

**1.6.1 நிதி செயலாற்றல் கூற்று**

**……………………………………………**

**1.6.1.1 வருமானமற்ற பெறுவனவுகள்**

**………………………………………………**

**திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள்**

**……………………………………………………**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது இராஜாங்க அமைச்சு பெற்றுக்கொண்ட திறைசேரி கட்டுநிதி ரூபா 171,589,000 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவாகத் தெரிவிக்கிறேன். 2021 ஆம் ஆண்டிற்காக அமைச்சிற்கு | திறைசேரி பெறுவனவுகள் சரியாக பதிவு செய்யப்பட வேண்டியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | ஆக இருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 174,899,439 ஆக காட்டியதன் காரணமாக திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 3,310,439 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட கட்டுநிதி ரூபா 171,589,000 ஆக இருந்ததுடன் அது திணைக்கள ஏடுகளில் (சிகாஸ்) பழையாக உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ரூபா 3,310,439 வித்தியாசம் திணைக்கள ஏடுகளுக்கும் திறைசேரி அச்சுக் குறிப்புகளுக்குமிடையே காணப்பட்டன. புதிய அமைச்சாக ஸ்தாபிக்கப்பட்ட இந்த அமைச்சின் நடவடிக்கைகள் புதிய ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டதுடன் அனுபவம் இல்லாததன் காரணமாக இப்பிழைகள் இடம்பெற்றுள்ளன. 2022 ஆம் ஆண்டிலிருந்து திணைக்கள ஏடுகள் முறைப்படியாக பேணப்படுகின்றது என மேலும் தெரிவிக்கிறேன். | உரிய வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுக்காக நிலைபேறான வலு அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,100,000 பணம் திறைசேரி கட்டுநிதியாக நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவாகத் தெரிவிக்கிறேன். மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுக்காக நிலைபேறான வலு அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,100,000 பணம் திறைசேரி கட்டு நிதியாக திணைக்கள ஏடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அப்பிழையினை சரி செய்வதற்காக பின்னர் அது வைப்பாக உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளில் குறிப்பிட்ட ரூபா 2,210,439 கூட்டு மொத்தமான 3 வரவுப் பதிவுகள் அமைச்சினால் நிதி செயலாற்றல் கூற்றில் திறைசேரி கட்டுநிதியாக காட்டப்பட்டிருந்தும் அப்பதிவுக்குரிய விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களை பின்வரும் விடயங்களுடன் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு தயவாக வேண்டிக் கொள்கிறேன். 2021 ஆம் ஆண்டிற்காக அமைச்சிற்கு வழங்கப்பட்ட கட்டுநிதியானது திணைக்கள ஏடுகளில் (சிகாஸ்) | உரிய வரவுப் பதிவுகளுக்குரிய நாட்குறிப்பு வவுச்சர்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பிழையாக உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ரூபா 3,310,439 வித்தியாசம் திணைக்கள ஏடுகளுக்கும் திறைசேரி அச்சுப் பிரதிகளுக்குமிடையே காணப்பட்டது. அதனை இந்த வரவுப் பதிவின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிலிருந்து திணைக்கள ஏடுகள் ஒழுங்கு முறைப்படியாகப் பேணப்படும் என மேலும் தெரிவிக்கிறேன். | |

**1.6.1.2 மீண்டுவரும் செலவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் கட்டிட வாடகை ரூபா 17,976,441 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதி செய்லாற்றல் கூற்றில் அதனை ரூபா 24,233,472 ஆகக் காட்டியதனால் கட்டிட வாடகையானது ரூபா 6,257,031 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களை பின்வரும் விடயங்களுடன் கவனித்துப்பார்க்குமாறு தயவாக வேண்டிக் கொள்கிறேன். 2021 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் கட்டிட வாடகை ரூபா 6,364,467 தொகை அமைச்சினால் செலுத்தப்பட்டதுடன் இரண்டாவது காலாண்டிலிருந்து நான்காவது காலாண்டு வரையான கட்டிட வாடகை ரூபா 17,869,005 தொகையானது அமைச்சினால் எங்கள் அமைச்சுக்காக செலுத்தப்பட்டது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான கட்டிட வாடகை ரூபா 24,233,472 என்பதுடன் அது நிதி செயலாற்றல் கூற்றில் சரியாகக் காட்டப்பட்டுள்ளது. | வித்தியாசத்திற்கான காரணத்தை வெளிப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் உரிய சரி செய்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திரண்ட பரீட்சை மீதியின் பிரகாரம் பயணச் செலவுகள் ரூபா 1,847,945 ஆக இருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் அது ரூபா 1,886,464 ஆகக் காட்டப்பட்டதனால் பயணச் செலவுகள் ரூபா 38,519 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானது என தயவாக தெரிவிக்கிறேன். 2021 ஆம் ஆண்டிற்கான பிரயாணச் செலவு ரூபா 1,886,464 ஆக இருந்ததுடன் அது திணைக்கள ஏடுகளில் (சிகாஸ்) பிழையாக உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ரூபா 38,519 வித்தியாசம் திரண்ட ஐந்தொகைக்கும் நிதி செயலாற்றல் கூற்றிற்குமிடையே காணப்பட்டது. | திணைக்கள ஏடுகளிலும் நிதிக்கூற்றுக்களிலும் தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் (எஸ்ஏ10) நிகழ்ச்சித்திட்டம் இலக்கம் 02 இன் மீண்டுவரும் செலவுகள் ரூபா 198,438,250 ஆக இருந்த போதிலும் நிதி செய்லாற்றல் கூற்றில் ரூபா 207,731,450 ஆகக் காட்டியதனால் அந்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 9,293,200 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானது என தயவாக தெரிவிக்கிறேன். திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் (எஸ்ஏ10) நிகழ்ச்சித்திட்டம் இலக்கம் 02 இல் குறிப்பிட்ட மீண்டுவரும் செலவுகள் சரியானதுடன் திணைக்கள ஏடுகளில் (சிகாஸ்) பிழையாக உள்ளடக்கப்பட்டதன் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 1.6.1.3 மூலதனச் செலவுகள்

.....................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ............................................ | ..................... |
| திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் (எஸ்ஏ10) நிகழ்ச்சித்திட்டம் இலக்கம் 02 இல் மூலதனச் செலவுகள் ரூபா 203,439,000 ஆக இ.ருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் அது ரூபா 209,717,200 ஆக அதாவது ரூபா 6,278,200 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானது என தயவாக தெரிவிக்கிறேன். திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் (எஸ்ஏ10) நிகழ்சிசித்திட்டம் இலக்கம் 02 இல் குறிப்பிட்ட மூலதனச் செலவுகள் சரியானதுடன் திணைக்கள ஏடுகளில் (சிகாஸ்) பிழையாக | திணைக்கள ஏடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டதன் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. | |

**1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்றுக்கள்**

**1.6.2.1 நிதியற்ற சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 10,205,340 ஆகக் காட்டப்பட்டிருந்தும் திறைசேரி கணனி அச்சுப் பிரதியின் பிரகாரம் அம்மீதியானது பூச்சிய பெறுமதி என்பது அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானது என தயவாக தெரிவிக்கிறேன். 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிதியற்ற சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் ரூபா 10,205,340 மாத்திரம் சிகாஸ் முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அது சிகாஸ் இணையத்தள பக்கத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததனால் திறைசேரி கணனி அச்சுப் பிரதியில் சொத்துக்களின் மீதி பூச்சியப் பெறுமதியைக் கொண்டிருந்தது. சிகாஸ் முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்களை சிகாஸ் இணையதள பக்கத்திற்கு உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது எனத் தெரிவிக்கிறேன். | நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக தேவையான சரியான அறிக்கையிடுதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 325,000 பெறுமதியான ஒரு லெப்டொப் கணனி நிலையான சொத்தாக நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானது என தயவாக தெரிவிக்கிறேன். 2020 திசெம்பர் 24 ஆந் திகதி செயலாளர் பிரிவிற்காக ரூபா 325,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட | நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | லெப்டொப் கணனி 2022 ஆம் ஆண்டின் போது சிகாஸ் முறைமைக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | வாகனங்களைப் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,242,150 செலவானது நிலையான சொத்துக்களாக நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானது என தயவாக தெரிவிக்கிறேன். புனரமைத்தல் செலவு விடயத்தின் கீழ் இதற்காக குறைநிரப்பு மதிப்பீட்டினுாடாக நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இப்பிழை எதிர்காலத்தில் மீண்டும் இடம்பெறமாட்டாது என தயவாக தெரிவிக்கிறேன். | -மேற்படி- |
| (ஈ) | வெளிநிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 471 சொத்துவிடயங்கள் இராஜாங்க அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் முறைப்படியாக பொறுப்பேற்கப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை . | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானது என தயவாக தெரிவிக்கிறேன். சொத்துக்கள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு சொத்துக்களை அமைச்சினால் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | சொத்துக்களை முறைப்படியாக பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ரூபா 79,500 பெறுமதியான ஒரு சொத்து இரண்டு தடவைகள் பதியப்பட்டதனால் சொத்துக்களானவை அத்தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது . | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானது என தயவாக தெரிவிக்கிறேன். சொப்ட் லயின் ட்ரேட என்ட் சேர்விஸ் நிறுவனத்திடமிருந்து திசெம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 79,500 தொகையான சொத்து இரு தடவைகள் பதியப்பட்டுள்ளதுடன் அது வங்கி கணக்கிணக்க கூற்றில் கொடுப்பனவு செய்யப்படாத காசோலைப் பட்டியலில் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

அதனை 2022 யூலை மாத வங்கி கணக்கிணக்க கூற்றின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1.6.2.2 நிதி சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான மின்வலு அதிகார சபையிடமிருந்து மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,100,000 தொகை ஏப்ரல் மற்றும் யூலை மாதங்களின் போது பணப் பெறுவனவுகளாக இரண்டு தடவைகள் காசேட்டில் பதியப்பட்டிருந்தததன் காரணமாக அத்தொகையால் காசு மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானது என தயவாக தெரிவிக்கிறேன். மேலதிக நேர வேலைக் கொடுப்பனவிற்காக நிலைபேறான மின்வலு அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,100,000 பணம் திறைசேரி கட்டுநிதியாக திணைக்கள ஏடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அது சரிசெய்யப்பட்டு வைப்பாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக ஏப்ரல் மற்றும் யூலை மாதங்களின் போது பணப் பெறுவனவுகளாக இருதடவைகள் காசேட்டில் பதியப்பட்டுள்ளது. | திணைக்கள ஏடுகளிலும் நிதிக் கூற்றுக்களிலும் தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 3,223,860 ஆக இருந்த போதிலும் வங்கிக் கூற்றில் பூச்சிய பெறுமதியாகக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 14,163,316 தொகையான கொடுப்பனவினை இனங்கண்டு காசேட்டில் திருத்தம் செய்யப்பட்டிருக்காததுடன் அக்கொடுப்பனவு இனங்காணப்படாத கொடுப்பனவாக வங்கி | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானவை என தயவு செய்து தெரிவிக்கிறேன். திணைக்கள ஏடுகளில் (சிகாஸ்) பிழையாக கட்டுநிதி கிடைத்த வகையில் தரவுகள் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ரூபா 3,223,860 தொகையான வித்தியாசம் திணைக்கள ஏடுகளுக்கும் திறைசேரி அச்சுப் | இனங்காணப்படாத கொடுப்பனவகளை இனங்கண்டு திருத்திய காசு மீதியினை சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 66,894,106 ஆக இருந்த போதிலும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத எனினும் வழங்கப்பட்ட காசேலைகளின் பெறுமதி ரூபா 77,995,591 ஆக இருந்ததனால் வங்கி மீதி யினை மிகைத்து ரூபா 11,101,485 தொகையான காசேலைகள் வழங்கப்பட்டிருந்தன. | பிரதிகளுக்குமிடையே காணப்பட்டது. எனினும் சிகாஸ் முறைமையில் காணப்பட்ட தவறின் காரணமாக அதனை திணைக்கள ஏடுகளில் சரி செய்வதற்கு முடியாதிருந்தது. எனவே அரசாங்க கணக்குகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் மாதத்தின் போது செலவுகளை பதிவழிப்பதன் மூலம் அமைச்சிற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற கட்டுநிதிக் கணக்கினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மீதி பூச்சியமாக இருந்த போதிலும் காசேட்டின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான காசு மீதி ரூபா 3,223,860 ஆகும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானவை என தயவு செய்து தெரிவிக்கிறேன். 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அச்சுப் பிரதிகளின் பிரகாரம் மீதி பூச்சியமாக இருந்ததுடன் காசேட்டு மீதி ரூபா 3,223,860 ஆகும். திணைக்கள ஏடுகளில் (சிகாஸ்) பிழையாகக் கட்டுநிதி கிடைத்த வகையில் தரவுகள் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ரூபா 3,223,860 வித்தியாசம் திணைக்கள ஏடுகளுக்கும் திறைசேரி அச்சுப் பிரதிகளுக்குமிடையே காணப்பட்டது. எனினும் | காசுப்பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சிகாஸ் முறைமையில் காணப்பட்ட தவறுகளின் காரணமாக அதனை திணைக்கள ஏடுகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. எனவே அரசாங்க கணக்குகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் மாதத்தின் போது செலவுகளைப் பதிவழிப்பதன் மூலம் அமைச்சிற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற கட்டுநிதி கணக்கினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |

**1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று**

**...............................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **....................................** | **..........................................** | **....................** |
| 2020 ஆகஸ்ட் 08 ஆந் திகதி இராஜாங்க அமைச்சு தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் மின்சக்தி அமைச்சில் சேவையாற்றிய 24 உத்தியோகத்தர்கள் இராஜாங்க அமைச்சிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களில் 18 நபர்களின் கடன் மற்றும் முற்பண மீதி ரூபா 3,371,186 ஆகும். எனினும் இக்கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குவது தொடர்பான விண்ணப்பப் பத்திரங்களை உள்ளடக்கிய ஆவணங்கள் இராஜாங்க அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் இராஜாங்க அமைச்சினை தோற்றுவிப்பதற்கு முன்னர் மின்சக்தி அமைச்சினூடாக முற்பணங்களை வழங்கிய திகதிகளை உள்ளடக்கிய தகவல் எதுவும் இராஜாங்க அமைச்சிடம் இருக்கவில்லை. அதற்கிணங்க கடன்கள் மற்றும் முற்பணங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களை பின்வரும் விடயங்களுடன் கவனித்துப் பார்க்குமாறு தயவாக வேண்டிக் கொள்கிறேன். 2020 ஆகஸ்ட் 08 ஆந் திகதி இராஜாங்க அமைச்சு தோற்றுவிக்கப்பட்டிருந்தும் அந்த ஆண்டின் திசெம்பர் மாதம் வரை இந்த அமைச்சின் கணக்கு நடவடிக்கைகளானது மின்சக்தி அமைச்சின் கணக்கு பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க மின்கச்தி அமைச்சிலிருந்து இராஜாங்க அமைச்சிற்கு இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் 2020 ஆகஸ்ட் 08 ஆந் | தேவைப்படுகின்ற ஆவணங்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சம்பந்தமாக உருவாகிய சிக்கல்கள் (கடன்களை திருப்பி செலுத்தாமை, பிணையாளர்கள் ஓய்வுபெறல், சேவையிலிருந்து விலகுதல், முதலியன) சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் உபபிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் போது சிக்கல்கள் ஏற்படாம் என்பது அவதானிக்கப்பட்டது. | திகதியிலிருந்து பெற்றுக்கொண்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான விண்ணப்பப் பத்திரங்களை மின்சக்தி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 1.6.5 கட்டுநிதி மீதி
..................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ............................................. | ..................... |
| திறைசேரி கணனி அச்சுப் பிரதியின் பிரகாரம் (எஸ்ஏ 70) கட்டுநிதி கணக்கின் திரண்ட வரவு மீதி ரூபா 174,899,439 ஆக இருந்த போதிலும் ஒன்றிணைந்த ஐந்தொகையில் அது ரூபா 176,421,489 ஆக ரூபா 1,522,050 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானவை என தயவு செய்து தெரிவிக்கிறேன். 2021 ஆம் ஆண்டிற்கான திறைசேரி அச்சுப் பிரதியின் பிரகாரம் (எஸ்ஏ 70) கட்டுநிதி கணக்கின் திரண்ட வரவு மீதி ரூபா 174,899,439 ஆக இருந்ததுடன் ஒன்றிணைந்த ஐந்தொகையில் அது ரூபா 176,421,489 ஆகக் காட்டப்பட்டது. திணைக்கள ஏடுகளில் (சிகாஸ்) கட்டுநிதி பெறுவனவு பிழையாக உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,522,050 வித்தியாசம் திணைக்கள ஏடுகளுக்கும் திறைசேரி அச்சுப் பிரதிக்குமிடையே காணப்பட்டது. எனினும் சிகாஸ் முறைமையில் காணப்பட்ட தவறின் காரணமாக அதனை திணைக்கள ஏடுகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. எனவே அசாங்க கணக்குகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் | உரிய வித்தியாசத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2021 திசெம்பர் மாதத்தின் போது செலவுகளை பதிவழிப்பதன் மூலம் அமைச்சு தொடர்பாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற கட்டுநிதி கணக்கினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |

**1.6.6 ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

இராஜாங்க அமைச்சினால் கீழே தரப்படும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 446 இல் குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் காசேடு முறைப்படியாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானதுடன் 2022 ஆம் ஆண்டிலிருந்து முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படும். | நிதிப்பிரமாணம் 446 இல் குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் காசேடு முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 502 (2) இன் பிரகாரம் அதன் II ஆவது பின்னிணைப்பிற்கு இணங்க நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 502 (2) இன் பிரகாரம் அதன் II ஆவது பின்னிணைப்பிற்கு இணங்க நிலையான சொத்துக்கள் பதிவேடு உரிய வகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டுடன் பேணப்படுதல் வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகள், காசுக் கட்டளைகள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 451 இல் தரப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஜீ.ஏ.எம் 83 ஆம் இலக்க படிவத்திற்கு இணங்க கிடைக்கின்ற |

| | | | |
|---|---|---|---|
| | | | காசேலைகள், காசுக்கட்டளைகளை பதிவு செய்வதற்கு முடியுமான வகையில் பேணப்படுதல் வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம பொறுப்புக்களை நாளாந்தம் பரீட்சிக்கக்கூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேட்டில் அப்பெறுப்புக்கள் பதியப்படுதல் வேண்டும். |
| (உ) | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்திற்கு இணங்க நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ஊ) | நிதிப்பிரமாணம் 502 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன்கள் மற்றும் முற்பணங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 502 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன்கள் மற்றும் முற்பணங்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (எ) | நிதிப்பிரமாணம் 891 (1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு தயாரிக்கப்படவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 891 (1) இல் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப்பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ஏ) | நிதிப்பிரமாணம் 454 (2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 454 (2) இல் குறிப்பிட்டவாறு அனைத்து அரசாங்க கட்டிடங்களிலும் மின்சார துணைக்கருவிகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருள் பதிவேட்டுப் புத்தகம் பேணப்படுதல் வேண்டும். |
| (ஐ) | நிதிப்பிரமாணம் 454 (3) இன் பிரகாரம் புத்தக பெயர்ப்பட்டியல் பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 454 (3) இன் பிரகாரம் புத்தக பெயர்ப்பட்டியல் பேணப்படுதல் வேண்டும். |
| (ஒ) | நிதிப்பிரமாணம் 454 (1) இன் பிரகாரம் பொருள் பதிவேட்டுப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 454 (1) இலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் 44 ஆவது பொதுப் படிவத்திற்கு இணங்க பொருள் பதிவேட்டுப் புத்தகம் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும். |
| (ஓ) | நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் பொருள் இருப்புப் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் பொருள் இருப்புப் புத்தகங்கள் பேணப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**......................**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

**..............................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **.....................................** | **............................................** | **.....................** |
| இராஜாங்க அமைச்சினால் கட்டுநிதி முறையாக முகாமைத்துவம் செய்யப்படாமையின் காரணமாக பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் கட்டுநிதிக் கணக்கின் மீதி மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானவை என தயவாக தெரிவிக்கிறேன். திணைக்கள ஏடுகளில் (சிகாஸ்) கட்டுநிதி பெறுவனவுகள் பிழையாக உள்ளடக்கப்பட்டதன் காரணமாக பெப்ரவரி மார்ச், ஏப்ரல் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் கட்டுநிதி கணக்கின் மீதி மறைப் | கட்டுநிதி முறைப்படியாக முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெறுமதியைக் கொண்டிருந்தது. எனினும் சிகாஸ் முறைமையில் காணப்பட்ட தவறின் காரணமாக அதனை திணைக்கள ஏடுகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. எனவே அரசாங்க கணக்குகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க 2021 திசெம்பர் மாதத்தின் போது செலவுகளைப் பதிவழிப்பதன் மூலம் அமைச்சு தொடர்பாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற கட்டுநிதி கணக்கினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**2.2 செலவு முகாமைத்துவம்**

**2.2.1 செலவு மதிப்பீட்டினை தயாரிப்பதிலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் இயலுமான அளவில் முழுமையாகவும் சரியாகவும் செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாமையின் அடிப்படையில் இராஜாங்க அமைச்சினால் 2021 ஆம் ஆண்டிற்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் 02 செலவு விடயங்களுக்காக ரூபா 9,500,000 மேலதிக நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதனை மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டுடன் ஒப்பீடு செய்த போது 28 சதவீதத்திலிருந்து 438 சதவீதம் வரையுமாகும். மேலும் கட்டிட வாடகைக்காக ரூபா 46,700,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னர் அதில் ரூபா 11,474,000 தொகை ஏனைய செலவு விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தன. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களை பின்வரும் விடயங்களுடன் கவனித்துப் பார்க்குமாறு தயவாக வேண்டுகிறேன். 2020 ஆம் ஆண்டில் புதிய அமைச்சாக இந்த அமைச்சினை தோற்றுவித்ததன் பின்னர் அந்த ஆண்டின் சில மாதங்களில் காணப்பட்ட செலவுகளை அடிப்படையாகக் கொண்டு 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரித்தல் இடம்பெற்றது. இது ஒரு புதிய அமைச்சாக இருத்தல் மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதி ஏற்பாட்டின் அளவு போதியதாக இல்லாததன் | செலவினைக் குறைக்கும் வகையிலும் சரியாகவும் மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காரணமாக தேவையான நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காகவும் கௌரவ இராஜாங்க அமைச்சரின் உத்தியோகபூர்வ வாகனத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கைக்காகவும் இந்த மேலதிக நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டது. 2021 ஆம் ஆண்டிற்கான கட்டிட வாடகையாக ரூபா 46,700,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த அமைச்சும் மின்சக்தி அமைச்சும் ஒரே கட்டிடத்தில் செயற்படுவதனை அடிப்படையாகக் கொண்டு கட்டிட வாடகையில் 1/3 அளவானவை மாத்திரம் இராஜாங்க அமைச்சு செலுத்துவதற்காக பயன்படுத்துகின்ற இடஅளவினை அடிப்படையாகக் கொண்டு மின்சக்தி அமைச்சு இணங்கியிருந்தது. அதனால் கட்டிட செலவு விடயத்தின் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதுடன் அந்த நிதி ஏற்பாட்டில் முறையான அங்கீகாரத்தின் கீழ் நிதி ஏற்பாடு பற்றாக்குறையான செலவு விடயங்களுக்காக மாற்றம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டது. | |

**2.2.2 நிதி ஏற்பாட்டின் குறைந்த பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 3 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 850,000 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் 100 சதவீதம் மற்றும் இன்னும் 16 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 451,175,995 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானவை என தயவாக தெரிவிக்கிறேன். நாட்டில் காணப்பட்ட கொவிட் | நிதி ஏற்பாட்டினை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் 12 சதவீதத்திலிருந்து 79 சதவீதம் வரையான தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் உருவாகிய பயண கட்டுப்பாட்டின் காரணமாக குறைந்த பதவியினர்கள் சேவைக்கு சமூகமளித்ததுடன் நிறுவனங்களின் செலவுகளை மட்டுப்படுத்த வேண்டியிருந்தது. இதன் காரணமாக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் அளவை பயன்படுத்த முடியாதிருந்தது. | |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இராஜாங்க அமைச்சின் ரூபா 323,722 தொகையான பொறுப்புக்களானது பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்காததுடன் ரூபா 101,682 மிகுதி நிதி ஏற்பாட்டினை ரூபா 26,367 ஆல் மிகைத்து ரூபா 128,049 தொகையான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் சரியானது. 2022 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட நிதி ஏற்பாட்டின் அளவிற்காக மாத்திரம் பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் செலவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) கிராமத்துடன் சினேகபூர்வ உரையாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட கிராமிய பிரதேசங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின்சார வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக மின்சக்தி அமைச்சினால் செலவுகளை | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களை பின்வரும் விடயங்களுடன் கவனித்துப் பார்க்குமாறு தயவாக வேண்டுகிறேன். இலங்கை நிலைபேறான மின்சக்தி அதிகார சபையினால் கிராமத்துடன் | செலவுகளை மீளளிப்புச் செய்யும் வவுச்சர்களை உரிய காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அதற்கு பின்னர் நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருத்தல் |

மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் இரஜாங்க அமைச்சிற்கு ரூபா 43,900,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.
செலவுகளை மீளளிப்புச் செய்யும் வவுச்சர்கள் 2021 திசெம்பர் 10 ஆந் திகதி அனுப்'பிவைக்க வேண்டியிருந்தும் அவ்வாறு அனுப்பிவைக்கப்படாதிருந்ததுடன் அத்திகதியின் பின்னர் அதாவது 2021 திசெம்பர் 24 ஆந் திகதி மேலும் ரூபா 12,637,200 தொகையான மேலதிக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

சினேகபூர்வ உரையாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மின்கம்பிகள் அற்ற (Off-Grid) தொழில்நுட்பத்தினூடாக மின்சார வசதிகளை வழங்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட கிரயமாக ரூபா 43.9 மில்லியன் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யுமாறு சூரிய சக்தி, காற்று மற்றும் மின் உற்பத்தி செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்த துடன் அதற்கிணங்க மின்சக்தி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு இணங்க உரிய நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் SEA/RES-1/21/W-1 ஆம் இலக்க 2021 ஒக்தோபர் 04 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் ரூபா 43.9 மில்லியன் தொகையான தொடக்க பாதீட்டு நிதி ஏற்பாடானது கலந்துரையாடிய இறுதி விலையினைவிட (Negotiated Final Report) ரூபா 12,637,200 தொகையால் அதிகரித்திருந்ததனால் அந்த மேலதிக பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க மின்சக்தி அமைச்சினால் இராஜாங்க அமைச்சிற்கு உரிய முழுப் பணமுமான ரூபா 56,537,200 தொகை இலங்கை நிலைபேறான மின்சக்தி அதிகார சபைக்கு வழங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டது. எனினும் இராஜாங்க அமைச்சினால் இலங்கை நிலைபேறான மின்சக்தி அதிகார சபைக்கு ரூபா 52,435,474 தொகை மாத்திரம் பணமாகச்

வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டது. | |
| (ஆ) | செய்த வேலைகளுக்குரிய விலைப்பட்டியல்களைப் பெற்றுக்கொள்ளாது நிலைபேறான மின்சக்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 56,537,200 தொகையான பேர்போமா இன்வொயிசுக்காக (Performa Invoice) இராஜாங்க அமைச்சினால் ரூபா 52,435,474 தொகை செலுத்தப்பட்டது. நி.பி 145(3) இன் பிரகாரம் மின்சக்தி அமைச்சு (முதல்வர்) தொடர்பாக இராஜாங்க அமைச்சு முகவராக செயற்பட வேண்டியிருந்த போதிலும் இராஜாங்க அமைச்சினால் அந்த நிதி ஏற்பாட்டினை இன்னுமொரு முகவருக்கு (நிலைபேறான மின்சக்தி அதிகார சபை) வழங்குதல் நிதிப்பிரமாணத்திற்கு முரணானது என அவதானிக்கப்பட்டது. இந்த நிதி ஏற்பாடு சம்பந்தமாக நி.பி 146(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் வேலையின் திட்டமும் அதன் செயல் முன்னேற்றமும் செலவுகளும் மற்றும் வருட இறுதியின் போது உரிய வேலைகளின் ஒரு பகுதி பூர்த்திசெய்யப்படாது மிகுதியாகக் காணப்பட்டதா என்பது சம்பந்தமாக ஆராய்ந்து பார்க்கும் பொறுப்பு மின்சக்தி அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதற்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி காசேலை எழுதப்பட்டு 2022 ஆம் ஆண்டின் சனவரி 25 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. திறைசேரியினால் வழங்கப்பட்ட கட்டுநிதியில் எஞ்சியுள்ள ரூபா 4,101,526 தொகையானது திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களை பின்வரும் விடயங்களுடன் கவனித்துப் பார்க்குமாறு தயவாக வேண்டுகிறேன். கிராமத்துடன் நல்லுறவு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கலமுதுன கிராமத்திற்கு மின்சாரத்தினை வழங்குவது சம்பந்தமான ஒரு அறிக்கையை வழங்குமாறு அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை அமைச்சினால் 2022/03/23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இராஜாங்க அமைச்சிற்குத் தெரியப்படுத்தியிருந்ததுடன் அதற்கிணங்க மீமுரேகல கிராமத்திற்கு மின்சாரத்தினை வழங்கும் செய்திட்டத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான ஒரு அறிக்கையை வழங்குமாறு இலங்கை நிலைபேறான மின்சக்தி அதிகார சபையின் மூலம் உரிய செயல்முன்னேற்றம் தொடர்பான ஒரு அறிக்கையினை இராஜாங்க அமைச்சுக்கான ஒரு பிரதியுடன் அபிவிருத்திகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் கலமுதுன மின்நிலையத்தை நிர்மாணித்தல், வீடுகளுக்கான வயரிங் வேலை, மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும் வீதியை நிர்மாணித்தல் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கிராமத்துடன் சினேக பூர்வமான உரையாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமிய பிரதேசங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின்சார | கணக்காளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களை பின்வரும் விடயங்களுடன் கவனித்துப் பார்க்குமாறு | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வசதிகளை மேம்படுத்துதல் என்ற செலவு விபரத்தின் கீழ் வவுனியா போகஸ்வெவ சபுமல் கந்தவல ரஜ மஹாவிகாரைக்கு மின்சார வசதிகளை வழங்கும் செலவுகளை மீளளிப்புச் செய்தல் என்ற பெயரில் இராஜாங்க அமைச்சினால் நிலைபேறான மின்சக்தி அதிகார சபைக்கு ரூபா 4,955,000 செலுத்தப்பட்டிருந்தும் உரிய மின்சார வசதிகளை வழங்கும் ஒப்பந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டன என்பதனை உறுதிப்படுத்தக்கூடிய எந்த ஆவணமும் வவுச்சர்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த நிதி ஏற்பாடு சம்பந்தமாக நி.பி 146(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் வேலைத் திட்டம் அதன் செயல்முன்னேற்றம் மற்றும் ஆண்டின் இறுதியின் போது உரிய வேலைகளில் ஒரு பகுதி பூர்த்திசெய்யப்படாது எஞ்சியுள்ளது என்பது சம்பந்தமாக ஆராய்ந்து பார்க்கும் பொறுப்பு மின்சக்தி அமைச்சினாலும் இராஜாங்க அமைச்சினாலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

தயவாக வேண்டுகிறேன். கிராமத்துடன் சினேகபூர்வமாக உரையாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வவுனியா போலஸ்வெவ சபுமல்கந்தவல ரஜமஹா விகாரைக்கு மின்சாரத்தை வழங்கும் செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பாக ஒரு அறிக்கையினை வழங்குமாறு இலங்கை நிலைபேறான மின்சக்தி அதிகார சபையின் மூலம் அறிக்கை இராஜாங்க அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் விகாரைக்கு சூரிய சக்தி மின்சக்தி முறைமைக்கு இலங்கை நிலைபேறான மின்சக்தி அதிகார சபையின் மூலம் பெறுகை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு மின்சாரம் வழங்குதல் இடம்பெற்றுள்ளது எனவும் தெரு வெளிச்சத்திற்காக சூரிய சக்தியால் செயற்படும் 15 தெரு விளக்குகள் பொருத்துதல் இடம்பெற்றுள்ளது எனவும் இதன் கீழ் 5 கிலோவொட் இயலளவுடனான 10 கிலோவொட் மணித்தியாலத்தினைக் கொண்டிருக்கும் பெற்றரி களஞ்சிய வசதிகளுடன் சூரிய மின்சக்தி முறைமை விகாரைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**2.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் சான்றுபடுத்தவேண்டியதுடன் அம்முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறே மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டியிருந்தும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானதாகும். அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் சான்றுபடுத்தி மற்றும் நிதி முறைமையின் வினைத்திறன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்குவிதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் | மேலதிக நேர வேலைச் செலவுகளை கண்காணிப்பதற்கும் | மின்பிறப்பாக்கதிற்காக மீள்புதுப்பிக்கத்தக்க மின்வலு உற்பத்தி | தாபன விதிக் கோவையின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவு | தொடர்ச்சியாக கட்டுப்படுத்துவதற்கும் ஒரு செயலாளரினாலும் திணைக்கள தலைவரினாலும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டிய போதிலும் இராஜாங்க அமைச்சினால் 2021 ஆம் ஆண்டின் போது மேலதிக நேர வேலைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 4,000,000 தொடக்க நிதி ஏற்பாட்டினையும் மிகைத்து ரூபா 5,261,389 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த பதவியனியினரில் 43 சதவீதமான அமைச்சு பதவியினர்களுக்காக ரூபா 3,748,039 மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது மொத்த மேலதிக நேர வேலை கொடுப்பனவுச் செலவில் 71 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. | மூலங்களுக்கு கவனம் செலுத்தும் அடிப்படையில் இராஜாங்க அமைச்சிற்கு பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள துடன் அந்த நடவடிக்கைக்காக இந்த மேலதிக நேர வேலைப்படிகள் செலுத்துதல் இடம்பெற்றுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி 103(1) | சொத்துக்கள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 73 பொருள் விடயங்களின் பற்றாக்குறை சம்பந்தமாக இராஜாங்க அமைச்சினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானது என தயவாக தெரிவிக்கிறேன். சொத்துக்களை மீளாய்வு செய்யும் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்ற | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பற்றாக்குறைகள் சம்பந்தாமாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ii) | நி.பி 137 | செலவுகளை அங்கீகரிக்கும் போது உரிய சேவைகள் வேலைகள் அல்லது வழங்கல்களை உரிய நியம தரத்தில் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும் இராஜாங்க அமைச்சினால் வழங்கல்களை உரிய நியம தரத்தில் பூரணப்படுத்துவதற்கு முன்னர் செலவுகளை அங்கீகரித்து 2020 திசெம்பர் 31 ஆந்திகதி ரூபா 1,486,252 தொகைக்கு காசேலை எழுதப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் போது உரிய பொருட்கள் நியமதரத்திற்கும் பொருள் விபரக் குறிப்பிற்கும் முரணாகக் கிடைத்திருந்ததனால் நிராகரிக்கப்பட்டது என இராஜாங்க அமைச்சு செயலாளரினால் தெரியப்படுத்தப்பட்டதுடன் பின்னர் அப்பொருட்களை கொள்வனவு செய்து இன்னும் ரூபா 1,327,060 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டது. | ஒரு புதிய அமைச்சாக ஸ்தாபிக்கப்பட்ட இந்த அமைச்சின் நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிக்க வேண்டியிருந்ததனால் அரசாங்க நிறுவனமான இலங்கை வணிகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து தேவையான நிலையான சொத்துக்கள் நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்டன. அரசாங்க நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்ய உள்ள பணம் என்பதனால் அந்த வவுச்சர்கள் அங்கீகரிக்கப்பட்டு அப்பணத்திற்காக காசேலை எழுதப்பட்டிருந்த போதிலும் லெப்டொப் இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள கோளாறுகளினக் காரணமாக வழங்குனருக்கு மீள ஒப்படைப்பதற்கு உரிய கடிதம் அனுப்பி பதிலாக வழங்குனரின் முகவர்கள் பல தடவைகள் வருகை தந்து உரிய கோளாறினை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ஒரு ஆண்டிற்கு அண்மித்த காலமாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்களுக்காக கொடுப்பனவு | - மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்தலானது 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தின் போது இடம்பெற்றது. அதன் போது ரூபா 1,486,252 பெறுமதியான சொத்துக்களில் ரூபா 159,192 பெறுமதியான ஏசீ இயந்திரம் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டதனால் 1,327,060 பெறுமதியான சொத்துக்களுக்காக மாத்திரம் பணம் செலுத்தப்பட்டது. | |
| (iii) | நி.பி 396 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த ரூபா 3,856,161 தொகையான 34 காசோலைகள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானதுடன் 2022 ஆம் ஆண்டிலிருந்து சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iv) | நி.பி 756(6) | 2021 திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் பொருள் மீளாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நி.பி இன் பிரகாரம் காட்டப்பட்டுள்ள கால அட்டவணைக்குள் அனைத்து அமைச்சுக்களும் வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ள வேண்டிய போதிலும் இராஜாங்க அமைச்சினால் 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வினை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் இந்த அமைச்சு ஒரு புதிய அமைச்சாக தோற்றுவிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட சொத்துக்களை இனங்காண்பதற்காக சொத்துக்கள் மீளாய்வுக் குழு நியமிக்கப்பட்டதுடன் 2021-11-10 ஆந் திகதி 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வுச் சபையும் நியமிக்கப்பட்டது. தற்பொழுது கிடைத்துள்ள சொத்துக்கள் மெய்மையாய்வு குழு அறிக்கையின் பிரகாரம் பொருள் மீளாய்வினை | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பேன். | |
| (இ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 05 மற்றும் 07 ஆம் பிரிவுகள் | இராஜாங்க அமைச்சின் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கணக்கு தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிறுவனத்தினால் கொள்வனவு செய்த சொத்துக்கள் சம்பந்தமான தகவல்கள் காலாண்டு ரீதியாக கணக்கு தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிய வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 8,881,840 பெறுமதியான சொத்துக்கள் தொடர்பான அறிக்கையினை கணக்கு தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சின் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை கணக்கு தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அறிக்கையிடுவதற்குத் தேவையானக நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுவேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | மின்சக்தி அமைச்சினால் இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்ட 12 வாகனங்கள் கணக்காய்வுத் திகதி வரையும் முறைப்படியாக இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்க | அந்த வாகனங்களை பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை இடம்பெற்றுவருவதுடன் அதற்காக வருமான உத்தரவுப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் முதலிய தொடக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்பொழுது | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வில்லை. | இராஜாங்க அமைச்சு அல்லது செயலாளர் இல்லாதிருந்த போதிலும் அமைச்சின் செயற்பாடுகள் மற்றும் கடமைகள் இடம்பெற்று வருகின்றன. எவ்வாறாயினும் இந்த இராஜாங்க அமைச்சினை மின்சக்தி மற்றும் வலு அமைச்சுடன் இணைத்தல் இதுவரை இடம் பெற்றிருக்கவில்லை. இந்த நிச்சயமற்ற சூழ்நிலையின் காரணமாக பொறுப்பேற்றல் சம்பந்தமாக சிக்கல் காணப்பட்டது. | |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டிக் கோவை இலக்கம் 06 இன் 2.1 ஆம் பந்தி | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,223,860 தொகையான காசு மீதி சம்பந்தமாக வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி அச்சுப் பிரதியின் பிரகாரம் மீதி பூச்சியமானதுடன் காசேட்டின் படியான மீதி ரூபா 3,223,860 ஆகும். திணைக்கள ஏடுகளில் (சிகாஸ்) பிழையாக கட்டுநிதி கிடைத்த வகையில் தரவுகள் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ரூபா 3,223,860 வித்தியாசம் திணைக்கள ஏடுகளுக்கும் திறைசேரி அச்சுப் பிரதிகளுக்குமிடையே காணப்பட்டது. எனினும் சிகாஸ் முறைமையில் காணப்பட்ட தவறின் காரணமாக அதனை திணைக்கள ஏடுகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. எனவே அரசாங்க கணக்குகள் திணைக்களத்திடமிருந்து | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் மாதத்தின் போது செலவுகளைப் பதிவழிப்பதன் மூலம் அமைச்சு தொடர்பாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற கட்டுநிதி கணக்கினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஊ) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 03/2021 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | பந்தி இலக்கம் 3.1 | சிகாஸ் உள்ளீட்டின் மூலம் உருவாக்கப்பட்ட பரீட்சை மீதி (ஒன்றித்த ஐந்தொகை) பின்னிணைப்பாக நிதிக்கூற்று தொகுதியில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு சரியானதுடன் தவறுதலாக CIGAS உள்ளீட்டின் மூலம் உருவாக்கப்பட்ட பரீட்சை மீதி (ஒன்றித்த ஐந்தொகை) பின்னிணைப்பாக நிதிக்கூற்றுக்கள் தொகுதியில் உள்ளடக்கப்படவில்லை. - | -மேற்படி- |
| (ii) | பந்தி இலக்கம் 8.3 | வைப்புக்காக கணக்கிணக்க கூற்றுக்களைத் தயாரித்து 2022 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இராஜாங்க | ஒவ்வொரு மாதமும் மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் மென்பொருள் பிரதி அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் அதன் மூலம் வைப்புக்களுக்கான கணகக்கிணக்க கூற்றினைப் பெற்றுக்கொள்ளலாம். வைப்புக்களுக்கான கணக்கிணக்க கூற்றினைத் தயாரித்து | -மேற்படி- |

| | |
|---|---|
| அமைச்சினால் அவ்வாறு வைப்புக்களுக்கான கணக்கிணக்க கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு 2022 யூன் மாதத்திலிருந்து சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**………………………………………………**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ………………………………… | ……………………………………… | ………………… |
| (அ) | அமைச்சு செயலாளரின் எழுத்துமூல அங்கீகாரமின்றி இராஜாங்க அமைச்சின் கணக்காளரினால் இராஜாங்க அமைச்சின் மேலதிக நேர வேலைச் செலவுகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கு நிலைபேறான மின்சக்தி அதிகார சபையிடமிருந்து மீளச் செலுத்தும் அடிப்படையில் 2021 ஏப்ரல் 12 ஆந் திகதி ரூபா 1,100,000 பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இப்பணம் சம்பந்தப்பட்ட சிக்கல் 2022-05-31 ஆந் திகதி தீர்த்து வைக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மின்சக்தி அமைச்சின் எழுத்து மூல அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 12 வாகனங்களுக்கு மேலதிகமாக இன்னும் 4 வாகனங்களுக்கு முறையான அங்கீகாரமின்றி இராஜாங்க அமைச்சினால் எரிபொருளுக்காக ரூபா 5,723,416 தொகையும் பராமரிப்பு செலவுகளுக்காக ரூபா 10,830,897 தொகையுமாக ரூபா 16,554,313 தொகையான செலவு வாகனங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தன. | காணப்பட்ட Covid -19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக அலுவலகத்திற்கு அழைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு இந்த வாகனங்கள் தற்காலிகமாக ஈடுபடுத்தப்பட்டன. அமைச்சின் வாகனங்களில் அதிக அளவானவை செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக | உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் நிதி ஏற்பாட்டு வரம்புக்குள் செலவுகளை கட்டுப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அது மொத்த மீண்டுவரும் செலவில் 16 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. வாகன பராமரிப்பு செலவுகளுக்காக வருடாந்த பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 8,700,000 தொடக்க நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக குறைநிரப்பு மதிப்பீட்டிலிருந்து ரூபா 2,500,000 தொகையும் மாற்றல்களின் மூலம் இன்னும் ரூபா 1,400,000 தொகையுமான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஈடுபடுத்தப்பட்டிருந்த பழைய வாகனங்கள் என்பதனால் தொடர்ச்சியாக திருத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டமை மற்றும் எரிபொருள் வினைத்திறன் வகையில் மிகவும் குறைந்த நிலைமை காணப்பட்டமையின் காரணமாக வாகனங்களை அதிக செலவு செய்து பராமரிக்க வேண்டி இருந்தது. | |
| (இ) | மின்சக்தி அமைச்சின் அங்கீகாரமின்றி அந்த அமைச்சின் பதிவு செய்தலுடன் ஒரு வாகனத்தின் நிறம் மாற்றப்பட்டிருந்தது. நிறத்தை மாற்றுதல் மற்றும் பிரதான திருத்தங்களுக்காக உரிய திருத்த தொகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்காத ஒரு வழங்குனர் அதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்த நிறுவனத்திற்கு ரூபா 3,242,150 பணம் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் வாகனத்திற்கான மூலதனச் செலவு நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருந்தும் வாகன பராமரிப்பு செலவுகளுக்காக மேற்கூறிய (ஆ) பந்தியில் குறிப்பிட்டவாறு மேலதிக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு இச்செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | KQ- 5423 ஆம் இலக்க வாகனம் RMV இன் மூலம் மின்சக்தி அமைச்சிடமிருந்து இந்த அமைச்சினால் பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கை ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தும் Covid- 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக அந்த உரிய காலப்பகுதிக்குள் வாகனங்களை பொறுப்பேற்கும் நடவடிக்கை தாமதமடைந்திருந்தது. அப்போது காணப்பட்ட Covid -19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக நிலவிய நடைமுறைச் சிக்கலினை கருத்தில் கொண்டு 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழங்குனரின் பட்டியலே 2021 ஆம் ஆண்டிற்காகவும் ஈடுபடுத்துவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. வாகனத்தின் நிறத்தினை மாற்றுதலினை உள்ளடக்கி பழுதுபார்த்தல் செலவுகளாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,242,150.00 தொகையான செலவும் அந்த பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்ட 2020 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்களின் பட்டியலில் பதிவுசெய்யப்பட்ட வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டது. அப்பணத்தை | உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுப்பனவு செய்யும் போது பிழையாக மீண்டுவரும் செலவாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஈ) | சர்வதேச அணுசக்தி முகவராண்மையின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிதியத்தின் (Technical Cooperation Fund) பங்களிப்பு பணமாக இராஜாங்க அமைச்சினால் யூரோ 126,194 அல்லது அமெரிக்க டொலர் 29,506,138 தொகை செலுத்தப்பட்டிருந்தும் 2020 நவம்பர் 25 ஆந் திகதியில் உள்ளவாறு அணு சக்தி முகவர் நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு விபரங்களின் பிரகாரம் பங்களிப்பு பணம் யூரோ 100,450 ஆகும். நிலுவைப் பண மீதியினை இலங்கையினால் பேணப்படுகின்ற கொடுப்பனவு பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து சரியானவை என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 செலவு வகைப்படுத்தல்-அங்கீகரிக்கப்பட்ட செலவு விடயங்கள், செலவு விடய தொகுதி, மற்றும் செலவு விடய பெயர் தொடர்பாக 1505 செலவு விடயம் ‘‘பங்களிப்பு பணம்’’ என்பதுடன் 1507, செலவு விடயமானது ‘‘மாகாண சபைகளுக்கான மானியங்கள்’’ ஆகும். மின்சக்தி அமைச்சிடமிருந்து ரூபா 28 மில்லியன் நிதி ஏற்பாடு இக்கொடுப்பனவுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் இக்கொடுப்பனவிற்காக அந்த நிதி ஏற்பாடு போதியதாக இருக்கவில்லை. அவ்வாறே 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டின் மூலம் 1505 செலவு விடயத்திற்காக எங்கள் அமைச்சிற்கு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாததுடன் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் அங்கீகாரத்தின் கீழ் அச்செலவு விடயம் 2021 ஆம் ஆண்டிற்கு செலவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இக்கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு போதியதல்லாத நிதி ஏற்பாட்டின் அளவினை 1404 செலவு விடயத்தின் கீழ் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்று 1505 செலவு விடயத்திற்கு மாற்றம் செய்து உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. பயன்படுத்தப்படுகின்ற காணியின் அளவின் அடிப்படையில் மாதாந்த | உரிய வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து மீதியின் உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டு கடன் மீதி உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டிட வாடகையில் 2/3 பங்கினை மின்சக்தி அமைச்சிற்குச் செலுத்துவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் 1404 செலவு விடயத்தில் 2021 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. அந்த நிதி ஏற்பாட்டின் அளவினை 1505 செலவு விடயத்திற்கு மாற்றுதல் இடம்பெற்றிருந்ததுடன் பணம் பெற்றுக்கொள்ளாப்பட்டது என்பதற்கு அந்த நிறுவனத்திடமிருந்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (உ) | மேலே குறிப்பிட்ட கணக்கு விபரங்களின் பிரகாரம் 2020 நவம்பர் 25 அந் திகதியில் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தின் ஒட்டுமொத்த நிதிப்பொறுப்பு (Financial Obligation of the Government of Sri Lanka ) யூரே 455,484 மற்றும் அமெரிக்க டொலர் 234,019 ஆக இருந்த போதிலும் இந்த நிலுவைப்பணம் சம்பந்தமாக அமைச்சு மற்றும் இலங்கை அணுசக்தி சபையினால் முறையான கணக்கு பதிவேடுகள் பேணப்படாமையின் காரணமாக நிலுவை மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. மேலும் இந்த பங்களிப்பு பணத்தை சர்வதேச நிறுவனத்துடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலத்தில் செலுத்தும் பொறுப்பு உத்தியோகத்தர்களைப் போல அப்பணத்தை உரிய முறையில் செலுத்தாமைக்கான காரணத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் இந்த | உரிய நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பங்களிப்பு பணத்தை உரிய முறையில் செலுத்துவதற்கு தேவையான நிதி இந்த அமைச்சிடம் இல்லாமையின் காரணமாக யூரோ 455,484 மற்றும் அமெரிக்க டொலர் 234,194 மீதிகள் காணப்பட்டன. | உரிய வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து மீதிகளின் உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டு கடன் மீதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் சர்வதேச உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலத்தில் அங்கத்துவ பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அமைப்பின்
அங்கத்துவத்தினை
தொடர்ச்சியாக
பேணுவததற்காக உரிய
நிலுவைப் பணத்தினை
செலுத்துதல் அல்லது
அதற்காக நிவாரணத்தைப்
பெற்றுக்கொள்வதற்காக
எடுக்கப்பட்டுள்ள
நடவடிக்கைகள் தொடர்பான
சான்றுகள் கணக்காய்விற்குச்
சமர்ப்பிக்கப்படவில்லை.